# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.49/2025

dated : 10.02.2026

P.W. 1

Name அந்தோணிராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு எழுத படிக்கத் தெரியும். 2ம் பிரதிவாதி என் மகன். 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக நான் எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.2 உள்ளடக்கத்தை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். வா.சா.ஆ.1 வழக்கறிஞர் மூலம் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அவர் பெயர் தங்க முருகன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் வழக்கறிஞர் மூலம் தயாரிக்கப்பட்ட ஆவணம் அல்ல. 1வது பட்டியல் சொத்து வீடு ஆகும். 2வது பட்டியல் சொத்து 2ம் வாதிக்கு பாத்தியப்பட்டது. அவற்றை 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். கிரைய ஆவணங்களில் கடனுக்காக கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்று வாசகங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். வழக்குரை சொத்திற்கான சொத்து வரி, குடிநீர் கட்டண இரசீது, மின் இணைப்பு கடந்த மாதம் வரை என் பெயரில்தான்

இருந்தது. அந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2வது பட்டியல் சொத்து கடை ஆகும். அதில் ஜவுளிகடை நடத்தி வருகிறேன். வா.சா.ஆ.6 முதல் 11 வரையான ஆவணங்கள் நான் 1, 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. அவை முன்னதாக பெறப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. கிரைய ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தொகையை நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளும் என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல கடனுக்காக எழுதிக் கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. தற்போது குடிநீர் கட்டண இரசீது, சொத்து வரி இரசீது பிரதிவாதிகள் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான் கடந்த மாதம் அவ்வாறு மாற்றிவிட்டார்கள். நான் கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கும்போது சிறிது காலம் குடியிருந்து கொள்வதாக அனுமதி பெற்று குடியிருந்து கடை நடத்தி வருகிறேன் என்றும் தற்போது வெளியேற மறுத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதற்கான மாத வாடகை தொகையை தற்போது வரை பிரதிவாதியின் வங்கி கணக்கில் செலுத்திவருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கத்துடன் இவ்வழக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.10 17:15:13 +0530